இறை நெருக்கத்திற்கு தடையாக இருப்பது எது?

தொகுப்பு:

மஹ்ழரி

இறை நெருக்கத்திற்கு தடையாக இருப்பது எது?

தொகுப்பு:
மௌலானா, மௌலவி, அல்ஹாஃபிழ்
H.A. அஹ்மது அப்துல் காதிரி மஹ்ழரி
முதல்வர், முஅஸ்கரூர் ரஹ்மான் மகளிர் அரபிக் கல்லூரி,
காயல்பட்டினம்

வெளியீடு:
அல்இஹ்ஸான் ஆன்மீக அறக்கட்டளை
நாகூர் ஷரீஃப்

பதிப்புரை

நஹ்மதுஹூ வநுஸல்லி அலா ரஸூலிஹில் கரீம்

அன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்...)

அல்லாஹ்வின் பேரருளாலும், அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் துஆ பரக்கத்தாலும், தென் கிழக்காசிய தனிப்பெருஞ்சோதி கருணைக்கடல் நாகூர் ஷாஹுல் ஹமீது பாதுஷா நாயகம் அவர்களின் கந்தூரி விழாவில் சன்மார்க்க தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சியை கடந்த 3.10.2002 முதல் நடத்தி வருகிறோம். இவ்வாண்டு முதல் புது முயற்சியாக அந்த சொற்பொழிவுகளை வாட்ஸ்அப் மூலம் பரப்புவதோடு, நூல் வடிவில் வெளியிட முன் வந்துள்ளோம். கடந்த ஆண்டு 30.03.2015 உரூஸ் தினத்தன்று நாகூர் தர்கா காதிரிய்யா மதரஸா பள்ளி வாசலில் மௌலானா, மௌலவி, அல்ஹாஃபிழ் **H.A. அஹ்மது அப்துல் காதிர் மஹ்ழரி** அவர்கள் **'இறை நெருக்கத்திற்கு பெருந்தடையாக இருப்பது எது?'** என்ற தலைப்பில் உரையாற்றி, அதை அவர்களே நூல் வடிவில் தொகுத்து வழங்கியுள்ளார்கள். அதை வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். பல்வேறு சிரமங்களுக்கிடையில் தொகுத்து அளித்த ஹள்ரத் பெருந்தகை அவர்களுக்கும், அதை வெளியிட முன்வந்த இஸ்லாமிய நல்ல உள்ளங்களுக்கும் எங்களின் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த முயற்சியை ஏற்றுக்கொள்வதோடு அதை தொடர்ந்து செய்வதற்கும் கிருபை செய்வானாக. இதற்கு உடலாலும், பொருளாலும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் இம்மையிலும், மறுமையிலும் நற்பாக்கியங்களை வழங்குவானாக. ஆமீன்... யா ரப்பல் ஆலமீன்...

இப்படிக்கு,

மௌலவி ஹக்கீம் **S. முஹம்மது இப்றாஹீம் ரஹ்மானி**

நிறுவனர்: அல் இஹ்ஸான் ஆன்மீக அறக்கட்டளை

எண்.12A, கொல்லர் தெரு, நாகூர் - 611 002,

தொடர்புக்கு: 94434 44885

அணிந்துரை

அனைத்து புகழும் அல்லாஹுக்கே உரித்தாகும், அவன் தான் எழுது கோலைக் கொண்டு கற்பித்தான், அவனின் அருள் வடிவமாய் அவனியில் வந்த அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களை தொடர்ந்தோர் யாவர் மீதிலும் சலவாத் சலாம் உண்டாவதாக ஆமீன்.

வல்ல அல்லாஹ் தன் அடியார்களை நல் வழிப்படுத்த நபிமார் களை அனுப்பினான், அவர்கள் சத்தியத்தை எடுத்துரைத்தார்கள். இன்னும் அல்லாஹ் வேதங்களையும் வழங்கினான், அவற்றில் நபிமார்கள் பேசியதையும், அவர்கள் கேட்ட துஆக்களையும் கூறினான், அதன் மூலம் பேச்சுக்கள் கால வேக சுழற்சியில் காணாமல் போகும், எழுத்தால் எழுதுவதால் அது பாதுகாக்கப்படும் என்ற உண்மையை இந்த சமூகத்திற்கு புரிய வைக்கிறான்,

அப்படியே பின் வந்த இமாம்களும் எண்ணற்ற நூல்களை பல சிரமங்களுக்கு இடையிலும் எழுதி வைத்தார்கள். அதனால் தான் இந்த சமூகம் பாதுகாக்கப்படுகிறது, அந்த நல் வழியில் தான் பல ஷெய்குமார்கள் தங்கள் உபதேசங் (மகூலாத்)களை எழுத்து வடிவில் (மக்தூபாத்) ஆக வழங்கியுள்ளார்கள், அந்த வகையில் தான் ஒரு உரை, நூல் உறையிலிட்டு உங்கள் கைகளில் வழங்கப்படுகிறது, இந்த உரை நிகழ்த்திய ஆலிம் அவர்கள் இந்த சமூகத்திற்கு பன்முகப் பரிணாமங்களில் சேவையாற்றி வருபவர்கள், மல்லிகைக்கு எப்படி அறிமுகம் தேவை இல்லையோ அப்படி மஹ்ழரிக்கும் தேவை இல்லை. அவர்களுக்கும் நாகூர் நாயகத்தின் உரூஸ் நாட்களில் உபதேசங்களை மக்கள் கேட்கும் வகையில் சிறப்பாக ஏற்பாடு செய்து வரும் இப்ராஹீம் ரஹ்மானி ஹழ்ரத் அவர்களுக்கும், நீடித்த நல் வாழ்விற்கு துஆ செய்யுங்கள், இறைவனருளால் அவர்களின் வழியே இந்த சமூகம் இன்னும் பல பயன்களை பெறட்டும். உலமாக்களை உம்மத்திற்கு உபயோகமாக்கித் தருவானாக. நம் துஆக்களை அல்லாஹ் கபூல் செய்வானாக ஆமீன்.

மிக்க பணிவுடன்

மௌலவி T.S.A. **அபூதாஹிர் ஃபஹீமி மஹ்ழரி**

ஆசிரியர், அல் அஸ்ரார் மாத இதழ்

حمدا لمن خلق الانسان– وعلمه البيان–والصلاة والسلام على رسول الله–وعلى اله حزب الله–واصحابه جند الله– وبعد–فقد قال الله تعالى في القران العظيم والفرقان المجيد– اعوذ بالله من الشيطان الرجيم

بسم الله الرحمن الرحيم– ان الدين عند لله الاسلام

கண்ணியமும் மகத்துவமும் நிறைந்த எஜமான் நாகூர் பாதுஷா நாயகம் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் உரூஸ் முபாரக்கை முன்னிட்டு அவர்களின் தர்பாரில் நடைபெறும் இந்த சிறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கும் சங்கைமிகு ஸாதாத்மார்களே! மரியாதைக் குரிய உலமாக்களே! கண்ணியமிகு பெரியோர்களே! அன்பின் தாய்மார்களே! சகோதர சகோதரிகளே!.

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பேரருளும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் நல்லாசியும் நம் அத்தனைபேர் மீதும் நிலவுமாக!

அல்லாஹ்வும் அவனது ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் எந்தெந்த காரியங்களை எடுத்து நடக்க வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளார்களோ அவை அனைத்தையும் எடுத்து நடக்கவும், எவைகளைத் தவிர்ந்து நடக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்களோ அவை அனைத்தையும் தவிர்ந்து நடக்கவும் எனக்கும்

உங்களுக்கும் நான் வசிய்யத் செய்துகொள்கிறேன். வல்ல அல்லாஹ் தவ்ஃபீக் செய்வானாக! ஆமீன்.

சங்கைக்குரியவர்களே! எனக்கு வழங்கப்பட்டிருக்கும் தலைப்பு இறை நெருக்கத்திற்கு தடையாக இருப்பது எது? என்பது .... ஒவ்வொரு மனிதனின் நோக்கமும் இறைவனை அடைந்து கொள்வதாகவே இருக்கவேண்டும். அது நரக விடுதலையைவிடவும் சுந்தர சுவனம் செல்வதை விடவும் மிக்க சிறந்ததாகும்.

வல்ல நாயன் அல்லாஹ்வை நெருங்குவதற்கான பல்வேறு வழிகளை வல்ல அல்லாஹ்வும் அவனது திருத் தூதரும் நிறைவாக சொல்லி இருந்தாலும் அவனை நெருங்க விடாமல் தடுத்து நிறுத்துவதற்கான தூரப்படுத்துவதற்கான பலவழிகளும் இருக்கவே செய்கிறது. அவை என்னென்ன என்பதை இங்கு சுட்டிக் காட்டுவதே இவ்வுரையின் நோக்கமாகும்.

இறை நெருக்கத்திற்கு தடையாக இருப்பது எவை என்பதைச் சுட்டிக்காட்டும் இறையறிந்த ஞானிகள்.... அதனை விரிவாகவும் தெளிவாகவும் கூறியுள்ளார்கள். அவை அனைத்தையும் இங்கு சொல்வதற்கான கால அவகாசம் இல்லை எனபது ஒருபக்கம் இருக்க அவை அனைத்தையும் சொல்வதற்கு நான் அவற்றை அறிந்தவனும் அல்ல. அறிந்த சில விஷயங்களை சொல்வதற்கும் கூட கால அவகாசம் போதாது. சொல்லப்படும் விஷயங்களை நம் நெஞ்சில் ஏற்றி அவற்றை வாழ்க்கையில் கொண்டு வருவதற்கு முயற்சிப்போமாக! வல்ல அல்லாஹ் அதற்கு துணை நிற்பானாக!

பொதுப்படையாக ரத்தின சுருக்கமாக சொல்வதாக இருந்தால் இதய நோய்களாக எவை இருக்கிறதோ அவைகள்தான் இறைநெருக்கத்திற்கு தடையானவை. இதயநோய் என்று நான் இங்கு குறிப்பிடுவது heart attack கை அல்ல. நெஞ்சு வழியை அல்ல. அதில் valve அடைபட்டுப் போயிருப்பதை அல்ல. மாறாக பொறாமையை, அறியாமையை, உண்மைக்கு மாற்றமாக நடக்க வேண்டும் என்று எண்ணுவதை, காழ்ப்புணர்ச்சியை கசப்புணர்வை கோபத்தை பிறரை தப்பாக எண்ணுவதை அடுத்தவர்களின் வளர்ச்சியை பொறுக்க முடியாமை.......... என்பன

இவைகள் நம் இதயங்களில் நுழையாமல் பாதுகாப்பதும் அல்லது நுழைந்திருக்கும் அவைகளை நம்மிலிருந்து அகற்றுவதும் இறை நெருக்கத்திற்கு வழியாக அமையும். எப்போது அவைகளை நாம் அகற்றி விட்டோமோ அப்போது நம் இதயங்கள் பரிசுத்தமாக ஆகிவிடுகிறது. எப்போது அது பரிசுத்தமாக ஆகிவிட்டதோ அப்போது அது இறைவன் குடிகொள்ளும் தளமாக அமைந்துவிடுகிறது. قلب المؤمن عرش الله தூய விசுவாசியின் இதயம் அல்லாஹ்வின் அர்ஷாகும் என்று உயர் சொல்லின் முகவரியாக நம் இதயங்கள் ஆகிவிடுகின்றன. ஒரு மனிதனோடு அவன் இதயத்தோடு இறைவன் ஆகிவிடும் போது அம்மனிதன் தப்பு செய்வதில்லை. குற்றங்கள் புரிவதில்லை. தன்னை இன்னொரு மனிதன் பார்கிறான் என்று ஒருவன் அறியும்போது அவன் பாவத்தை செய்ய தயங்குவான். தனது தந்தை பார்கிறார் தன்னைக்

கவனித்துக் கொண்டிருக்கிறார் என்று விளங்கும் எந்த மகனும் புகைபிடிக்ககூட தயங்குவான். ஓர் ஆசிரியர் தன்னை கவனிக்கிறார் என்றுணரும் எந்த மாணவனும் தப்புபண்ண மாட்டான்.

இதுபோன்று தன்னோடு அல்லாஹ் இருக்கிறான் என்றுணர்ந்த எந்த மனிதனும் பாவத்தின் பக்கம் திரும்பியும் பார்க்கமாட்டான்.

செய்யிதுனா ஸஹ்ல் இப்னு அப்தில்லாஹ் (ரழியல்லாஹு அன்ஹு) இளம் வயதாக இருந்தபோது அவர்களின் மாமா, ஸஹ்லே! எப்போதும் ان الله معي என்று சொல்லிக்கொண்டே இரு என்று கற்றுக் கொடுத் தார்கள். அவர்களும் அவ்வாறே சொல்லிக்கொண்டு வந்தார்கள். நாளடைவில் வல்ல அல்லாஹ் தன்னோடிருக் கிறான் என்ற எண்ணம் மேலோங்கி சிறுபாவத்தைக்கூட நினைத்துப் பார்க்காத பரிசுத்த புனிதராக திகழ்ந்தனர்.

الحزن يمنع من الطعام والخوف يمنع من الذنوب துக்கம் தொண்டையை அடைக்கிறது என்று தமிழ் கூறும். ஒரு மனிதனுக்கு கவலை அதிகரித்தால் அது அவனை உணவு உட்கொள்ளவிடாமல் தடுக்கும். (இறை) அச்சம் அதிகரித்தால் அது அவனைப் பாவம் செய்யவிடாமல் தடுக்கும். எனபது ஸூஃபிகளின் சுந்தர சொல்.

ஒரு மனிதனுக்கு முன்பு அவன் விரும்பிய உணவு வகைகள் பதார்த்தங்கள் விதவிதமான பானங்கள் என வைக்கப்பட்டாலும் அவன் இதயத்தில் கவலை குடிகொண்டிருந்தால் அதனை அவன் சுவைக்கமுடியாது.

அப்படியே வற்புறுத்தப்பட்டு அதனை அவன் சாப்பிட வைக்கப்பட்டாலும் அதன் ருசியை அவன் அறிந்து கொள்ள முடியாது. இது போன்றே ஒரு மனிதனின் இதயத்தில் அல்லாஹ்வின் அச்சம் நுழைந்து விடுமேயானால் உலக ஆசாபாசங்கள் கவர்சிகள் பாவசுவைகள் எதிலும் அவன் கவனம் செலுத்த முடியாது. இறையச்சத்தில் அவன் இன்பம் காணுபவனாக ஆகிவிடுவான்.

நான் ஓர் உதாரணம் உங்களுக்கு சொல்வேன்......

ஒரு மாணவன் பள்ளிக்கூடத்திலிருந்து மதிய வேளை கடும் பசியோடு வீடு வருகிறான். தன் தாயிடம், உம்மா எனக்கு கடுமையாக பசிக்கிறது. பொறுக்க முடியவில்லை. சீக்கிரம் எனக்கு சாப்பாடு தா என அலறுகிறான். சமையலறையில் சமையல் செய்து கொண்டிருந்த தாய், மகனே! கொஞ்சம் பொறு இன்னும் பத்து பதினைந்து நிமிடங்களில் சாப்பாடு தயாராகிவிடும். உனக்கு பிடித்தமான உணவு தயார் செய்து கொண்டிருக்கிறேன் என்று சொன்ன போது.... இன்னும் பத்து பதினைந்து நிமிடமா? என்னமா? என்னால் பொறுக்க முடியாதுமா... என்று கத்துகிறான்.

அச்சமயம் திடீரென்று அவனுக்கு TV-ல் முக்கியமான கிரிக்கெட் மேட்ச் ஒளிபரப்பு செய்யப்படுவது நினைவிற்கு வந்து அவன் TV-யை ON பண்ணுகிறான். அந்த CHANNEL-லை அவன் CLICK செய்ததும் உற்சாகத்தில் குதிக்க ஆரம்பித்து விட்டான். காரணம், அவனுக்கு பிடித்த மட்டைக்காரர் விளையாடிக் கொண்டிருக்கிறான். இவன் அவனின் விசிறி. தன் முழு கவனத்தையும் அதில் செலுத்தி

குத்துக்கல் போன்று அமர்ந்து பார்த்துக்கொண்டிருக்க, அவனது தாயாரோ, தன் பிள்ளை பசியால் துடிக்கிறானே என அவசர அவசரமாக சமையலை முடித்து மகனை சாப்பிட அழைக்கிறார். ஆனால் அதனை சற்றும் காதில் வாங்கிக் கொள்ளாமல் அவன் TV-ல் விளையாட்டை பார்ப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறான். தாயாரும் அவன் அருகில் வந்து அவன் தோளை உலுப்பி சாப்பிட வாடா! பசி பசின்னு துடிச்சியே என்று அழைத்த போது, போமா! எனக்கு பசிக்கல்ல நான் லேட்டா சாப்பிடுகிறேன் என்கிறான்.

இவனின் கொடும் பசி எங்கு போனது? கேவலம் ஒரு கிரிகட் விளையாட்டு ஒரு மனிதனின் பசியை போக்கிடக்கூடியதாக இருக்குமேயானால்...... இறைச் சிந்தனையும் அவனைப்பற்றிய அச்சமும் ஒரு மனிதனை எவ்வளவு தூரம் மாற்றமடைய செய்யும் என்பதனை இங்கு உற்று நோக்க வேண்டும்.

இதைப்போன்று ஆசையும், இச்சையும் இறை நெருக்கத்திற்கு தடையாக அமையும். ஓர் அழகிய கட்டிடத்தைப் பார்க்கிறோம். அதுபோன்று மாளிகை தனக்கும் வேண்டும் என்று எண்ணுகிறோம். ஒரு புதிய காரைப் பார்க்கிறோம்.அதுபோன்று தனக்கு வேண்டும் என்று விரும்புகிறோம்.ஒரு அழகிய பெண் கண்ணில் படுகிறாள். அவளை மீண்டும் திரும்பி பார்க்க மனது ஆசை கொள்கிறது. ஒரு ருசியான உணவைச் சாப்பிடுகிறோம். இன்னொரு முறையும் அதுபோன்ற உணவை சாப்பிட வேண்டும் என்று மனது நாடுகிறது.

மிகப்பெரும் பாக்கியமான இறை நெருக்கத்தை அடைந்துக் கொள்ள இவைகளை எல்லாம் விட்டு மனதை ஒழுங்கு படுத்தவேண்டும்.

ஒன்றை அடைவதற்கு ஒன்றை இழக்க வேண்டும் என்பர். மாபெரும் ஒன்றை பெற்றிட மாபெரும் தியாகம் அவசியம்.

எந்த பொருளின் மீதும் எந்த ஒன்றின் மீதும் ஆசையே படாத ஒரு ஸூஃபியை ஒருவர் ஆச்சர்யத்துடன் பார்கிறார். எப்படி இவரால் ஆசை இல்லாமல் வாழ முடிகிறது?. ஓர் உணவு ஓர் ஆடை ஓர் இல்லம் ஒரு வாகனம் ஒரு சுற்றுலா என்று எந்த ஒன்றின் மீதும் சிறிய பிடிப்பும் இல்லாமல் இவரால் எப்படி இருக்க முடிகிறது? என்ற விந்தையோடு அவரையே கேட்டுவிடுவோம் என அவரை அணுகி.... ؟لا تشتهي! பெரியவரே! உங்களுக்கு ஆசையே இல்லையா? எதன் மீதும் நீங்கள் மையலாக மாட்டீர்களா? என்று கேட்டபோது......

இல்லையே! எனக்கும் ஓர் ஆசை இருக்கத்தான் செய்கிறது என்றார். கேட்டவர், விக்கித்து, ஓஹோ இவருக்கும் ஆசை இருக்கத்தான் செய்கிறது போலும் நமக்குதான் அது தெரியாமல் போய்விட்டது போலும் என்று எண்ணி... அது என்ன ஆசை என்று நான் தெரிந்துக் கொள்ளலாமா? என்று கேட்டபோது... அவர் சொன்ன பதில் இவரை திகைக்க வைத்து விட்டது.

اشتهي ان لا اشتهي எந்த ஆசையும் கொள்ளக்கூடாது என்பது தான் நான் விரும்பும் ஆசை என்றார்.

இறை நெருக்கத்தைப் பெறுவது என்பது அவ்வளவு சாமான்யமானது அல்ல அதற்காக மிகுந்த விலைகொடுக்க வேண்டியதிருக்கும்.

لا يَسْتَقِيمُ حُبُّ الدُّنْيَا وَحُبُّ الآخِرَةِ فِي قَلْبِ مُؤْمِنٍ ، كَمَا لا يَسْتَقِيمُ الْمَاءُ وَالنَّارُ فِي إِنَاءٍ.

தண்ணீரும் நெருப்பும் ஒரு பாத்திரத்தில் ஒன்றிணையாத மாதிரி உலக ஆசையும் மறுஉலக ஆசையும் ஒரு முஃமினின் இதயத்தில் ஒன்றிணையாது.. என்கிறார்கள் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள்.

இந்த ஹதீஃதின் அடிப்படையில்...... ஒருவன் உலகத்தில் அவனுக்கு ஆகுமாக்கப் பட்டதை அனுபவிக்க கூடாதா? விருப்பமானதை சாப்பிடக்கூடாதா? விரும்பியதை அணியக்கூடாதா? அப்படி அனுபவித்தால் மறு உலக பாக்கியம் இல்லாமல் போய்விடுமா? அவன் சுவனத்தில் நுழைய முடியாதா? என்பது போன்ற கேள்விகள் எழலாம்....

அப்படி பொருள் கொள்ளக்கூடாது. நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் உட்பட எல்லா நபிமார்களும் எல்லா நபித்தோழர்களும் திருமண முடித்துள்ளார்கள். சுலைமான் நபி (அலைஹிஸ்ஸலாம்) போன்ற சில நபிமார்களும் சில சஹாபாக்களும் மிகப்பெரிய செல்வந்தர்களாக இருந்துள்ளனர்.

النِّكَاحُ سُنَّتِي وَسُنَّةُ الأنبِيَاءِ مِنْ قَبْلِي , فَمَنْ رَغِبَ عَن سُنَّتِي فَلَيْسَ مِنِّي

திருமணம் நபிமார்களின் வழிமுறை என்றும் அதனைப் புறக்கணிப்பவர் என்னைச் சார்ந்தவர் அல்ல என்றும் ஹதீஃது கூறுகிறது.

فَانكِحُواْ مَا طَابَ لَكُم مِّنَ النِّسَاء

உங்களுக்கு விருப்பமான பெண்களை நீங்கள் திருமணம் முடியுங்கள் என அருள்மறை இயம்புகிறது.

كُلُواْ وَاشْرَبُواْ وَلاَ تُسْرِفُواْ

சாப்பிடுங்கள் பருகுங்கள் என்று அருள்மறையும் செல்வத்தையும் அதனை கொடுக்கப்பட்டவர்களையும்

ذَلِكَ فَضْلُ اللهِ يُؤْتِيهِ مَنْ يَشَاءُ

அது அல்லாஹ்வின் அருட்கொடை நாடியவர்களுக்கு அவன் அதனை வழங்குகிறான் என்று நபிமொழியும் கூறுகிறது.

இப்படி எண்ணற்ற உலகம் சம்மந்தப்பட்ட நடவடிக்கை களை குர்ஆனும் ஹதீஃதும் ஆதரிக்கவும் அதனைச் செயல்படுத்த தூண்டவும் செய்கின்றன.

எனவே இவை ஒருபோதும் இறைநெருக்கத்திற்கு தடையாக இருக்கமுடியாது.

இங்கே ஹுப்புத்துன்யா என்று அந்த ஹதீஃதில் கூறப்பட்டதெல்லாம் மனோ இச்சை ,மாசு படிந்த செயல் பாடுகள் ,மனிதாபிமானமற்ற செயல்கள், குரோதம்,

குழப்பம் நாவினைப் பேணாமை, பொறாமை கெடுமதி, போன்றவற்றையே குறிப்பிடப்படுகிறது.

அத்தோடு ஆகுமாக்கப்பட்ட விஷயங்களிலும் கூட அளவுகடந்து கடப்பு செய்வது இறை நெருக்கத்தை விட்டும் தூரப்படுத்திவிடும்.

ஐந்து கவள உணவு போதும் என்ற நிலையில் ஆறாவது கவளம் சாப்பிடுவது ஆகுமானதில் கடப்பு செய்வதாகும். நான்கிலேயே முடித்துக்கொள்வது இறையன்பை பெற்றுத்தரும். நஃப்ஸுக்கு மாற்றம் செய்வது என்பது இறைவனுக்கு மிக்க பிரியமானது.

ஒரு சமயம் மன்னர் ஹாரூன் ரஷீத் பாதுஷா அவர்கள், இமாமுல் அஃளம் அபூ ஹனீஃபா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களோடு பேசிக்கொண்டிருந்தபோது, இமாம் அவர்களே! மனசுக்கு மாற்றம் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் என்மனசு நல்லதைச் சொன்னாலும் நான் மாற்றமே செய்வேன் என்று மன்னர் கூற, அதெப்படி? என்ற இமாம் வினவியபோது, ஒரு யாசகன் வந்து என்னிடம் பசியாக இருக்கிறது ஏதாவது தாருங்கள் என்று கேட்கும் சமயம் என் மனது அவனுக்கு பத்து திர்ஹம் கொடுக்க விரும்பினால்..... அது நல்ல விஷயம் தானே! என்றாலும் நான் அதற்கு மாறு செய்ய நாடி இருபது திர்ஹம்களைக் கொடுப்பேன் என்றார். இத்தகைய பெருமக்கள் சுவனத்தில் சுந்தர பெருவாழ்வை எய்தப்பெருவார்கள்.

சுவனத்திலும்கூட சிலமனிதர்கள் சிலபொழுது சங்கடத்தை

அனுபவிப்பார்களாம். இது ஆச்சர்யமாகவும் அதிசயமாகவும் நமக்கு இருக்கலாம். சுவனத்தில் சுகத்தைதவிர வேறு எந்த சங்கடமும் இருக்காதே! அங்கு கற்பனைக்கு எட்டாத அற்புதங்கள் அல்லவா நிறைந்திருக்கும்? வேண்டியதெல்லாம் கிட்டும். விரும்பியதெல்லாம் கிடைக்கும் இப்படித்தானே நாம் சுவனத்தை விளங்கி இருக்கிறோம். இது குறித்து

قَالَ رَسُولُ اللهِ صلى الله عليه وسلم : قَالَ : اللَّهُ أَعْدَدْتُ لِعِبَادِي الصَّالِحِينَ مَا لاَ عَيْنَ رَأَتْ ، وَلاَ أُذُنَ سَمِعَتْ ، وَلاَ خَطَرَ عَلَى قَلْبِ بَشَرٍ فَاقْرَؤُوا إِنْ شِئْتُمْ {فَلاَ تَعْلَمُ نَفْسٌ مَا أُخْفِيَ لَهُمْ مِنْ قُرَّةِ أَعْيُنٍ}.

எந்த கண்ணும் பார்த்திராத எந்த காதும் கேட்டிராத எந்த இதயத்திலும் தோன்றி இருக்காத (நிறைய சுகங்களை) எனது நல்லடியார்களுக்காக (சுவனபதியில்) நான் தயார் படுத்தி வைத்துள்ளேன். என்று அல்லாஹ் குறிப்பிடுகிறான். எந்த ஆத்மாவும், அவர்களுக்காக மறைத்து வைக்கப்பட்டிருக்கும் கண்குளிர்ச்சியான (கூலியை) அறிந்துகொள்ளாது) என்ற வசனத்தை விரும்பினால் நீங்கள் ஓதிக்கொள்ளுங்கள் என்று பூமான் நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் இயம்பியுள்ளார்கள்.

இது போக அங்குள்ள மரங்கள் சோலைகள் மாளிகைகள் விருந்து உபசாரங்கள் சுவன ரம்பையர்களான ஹுருல் ஈன்கள் என்று எல்லாமே பாக்கியமாகவும் பரவசத்திற்குரிய தாகவும் சந்தோஷத்திற்குரியதாகவும் காணப்படும் போது

சங்கடம் எப்படி உருவாகும் ? கவலைகளும் கஷ்டங்களும் எங்ஙனம் உண்டாகும்?

இதுகுறித்து ஆரிஃபூன்களாகிய வல்ல அல்லாஹ்வை விளங்கிய நாதாக்கள் இயம்பும்போது.......

சுவனப்பெருவாழ்வு என்பது பாக்கியமானது. நரக விடுதலை எனபது அதனை விடவும் மேலானது. இவற்றை விட மிக்க சிறந்த பாக்கியம்தான் இறை நெருக்கமும் பொருத்தமும். அதன்வாயிலாக அவனது லிகா என்னும் அவனை தரிசிப்பதும்.

சுவன வாசிகளுக்கு வல்ல அல்லாஹ் காட்சி அளிப்பான். அந்த காட்சி என்பது எல்லோருக்கும் எப்போதும் கிடைப்பதில்லை. அதுபோன்று அக்காட்சி எல்லோருக்கும் ஒன்று போலவும் இருப்பதில்லை. நேரமும் காட்சியும் அவர்களின் இறைநெருக்கத்தைப் பொருத்து வேறுபடும். எப்படி இருப்பினும் அந்த காட்சிக்கு நிகராக வேறு எந்த ஒன்றையும் சுட்டிக்காட்ட முடியாத அளவு மிக்க சௌந்தர்யம் நிறைந்ததாக இருக்கும்.

சிலருக்கு இக்காட்சி ஆயிரம் வருடத்திற்கு ஒருமுறை கிடைக்கலாம். சிலருக்கு சில நூறு வருடங்களுக்கு ஒருமுறை கிடைக்கலாம். இன்னும் சிலருக்கு பத்து வருடங்களுக்கிடையில் கிடைக்கலாம். சிலருக்கு சில மாதங்களுக்கிடையிலும் வாரங்களுக்கிடையிலும் மிக்க சிலருக்கோ சில நாட்களுக்கிடையிலும் அதனைவிட குறைந்த பெருமக்களுக்கு சில மணி நேரங்களுக்கிடையிலும் கிடைக்கலாம்.

அப்படி கிடைத்து சொற்ப நேரம் அக்காட்சி அவர்களுக்கு திரை இடப்படும்போது அவர்கள் சங்கடத்தில் துடித்துப் போவார்கள். நரகத்தில் போடப்பட்டது போன்று துடித்து போய்விடுவர். மீண்டும் அவனை எப்போது காண்போம் என்று ஏங்கித்தவிப்பர்

இந்த மகத்தான பாக்கியத்தைப் பெற்றவர்கள் வல்ல அலாஹ்வை மிக்க நெருங்கியவர்களாகும்..

இந்த வேதனையை நான் ஒரு சின்ன உதாரணத்தின் வழியாக உங்களுக்கு விளங்க வைக்கிறேன்.

ஒரு நண்பன் தான் அதிகம் நேசிக்கும் இன்னொரு நண்பனை பிரியவேண்டிய நிலை ஏற்பட்டால் , உயிருக்கு உயிராக நேசிக்கும் அன்புத்தாய் நம்மை விட்டும் மரணித்தால், தன் அன்பிற்கும் மிகுந்த கருணைக்கும் உரித்தான தன் அன்பு செல்லப்பிள்ளை இறந்துவிட்டால் திருமணம் முடிந்த ஒரு வாரத்திலேயே அரபுநாட்டு விசா வந்து அவசர அவசரமாக தன் அன்பு ஆசை மனைவியை பிரிந்து புறப்பட வேண்டியநிலை ஏற்பட்டால்......? இந்த பிரிவுகளால் எத்துணை வலி இருக்கும். மனது என்ன பாடுபடும். இதுபோன்று அல்ல இதனைவிட கோடான கோடிமடங்கு வேதனையில் துடித்துப் போய்விடுவர் இறையன்பர்கள்.

அல்லாஹ்விற்காக எதையும் செய்ய துணிந்த பெருமக்கள் எதையும் தியாகம் செய்திடும் நன்மக்கள் எத்தகைய விருப்பத்தையும் துறக்க துணிந்த மேன்மக்கள். இவர்களே அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறமுடியும்.

பிஷ்ருல் ஹாஃபி (ரழியல்லாஹு அன்ஹு) சூஃபியாக வாழ்ந்தவர்கள். பல சூஃபிகளை உருவாக்கியவர்கள். அவர்கள் குறிப்பிடுகிறார்கள்... எனக்கு ரொம்ப நாளாக கத்தரிக்காய் தின்ன வேண்டும் என்ற ஆசை இருந்தது.... பலவருடங்கள் கடந்தும் நான் அதனை சாப்பிடாமலே இருந்தேன்.

கத்தரிக்காய் என்பது கிடைக்காத ஒரு பொருள் அல்ல இருந்தபோதிலும் தன் நஃப்சை அடக்கி ஒடுக்கி அதற்கு தராமல் வைத்திருந்தார்கள்.

இந்த தகவலை தொடர்வதுக்கு முன்பாக, கத்தரிக்காய் என்றதும் எனக்கு ஒரு தமாஷான விஷயம் நினைவிற்கு வருகிறது.

ஒருவன் ஊர் ஊராக சென்று கத்தரிக்காய் வியாபாரம் செய்துக் கொண்டிருந்தான்.

புதிதாக ஓர் ஊருக்கு வந்த அவனின் கடையில் கத்தரிக்காய் விற்பனை ஆகவில்லை. நேரம் ஆக ஆக அவனுக்கு பயம் வந்து விட்டது. இன்று வியாபாரம் அறவே நடக்காமல் போய்விடுமோ? நஷ்டமடைந்து விடுவோமோ? அல்லது இந்த ஊர் மக்கள் கத்தரிக்கையே சாப்பிடமாட்டார்களோ என்றெல்லாம் யோசிக்க துவங்கினான்.

காலையில் துவங்கிய கடையில் ஒரு கத்தரிக்காய் கூட விற்பனை ஆகவில்லை என்றபோது அவன் ஒரு தந்திரம் செய்தான். ஒரு அட்டையை எடுத்து அதில்,

من اكل الباذنجان فقد دخل الجنة – رواه البخاري

யார் கத்தரிக்காய் சாப்பிடுகிறாரோ அவர் திட்டமாக சுவனம் நுழைந்திடுவார். அறிவிப்பாளர் புகாரி என்று எழுதி கடைக்கு முன்பாக வைத்தார். அவ்வளவுதான். மக்கள் பார்த்தார்கள். இப்படி ஒரு ஹதீஃதை நமக்கு யாரும் சொல்லவில்லையே இவர்தானே சொல்கிறார்.அது கூடாது இது கூடாது வசீலா கூடாது மத்ஹப் கூடாது ஸியாரத் கூடாது என்று புதிது புதிதாக சொல்லும்போது ஒருகூட்டம் அவருக்கு பின்னால் போகும் இல்லையா? அதுபோல எனக்கு உனக்கு என்று போட்டி போட்டு மக்கள் கத்தரிக்காயை வாங்க ஆரம்பித்தார்கள். இதனைப் பார்த்து அவன் அதன் விலையையும் கூட்டிவிட்டான்.சற்று நேரத்தில் எல்லாம் விற்று தீர்ந்தது. விற்ற கொள்ளை காசை சாவாகாசமா எண்ணிக்கொண்டிருந்தான்.அந்த சமயம் அந்த வழியே ஒரு மார்க்க அறிஞர் சென்றார். அவர் அந்த BOARDடை படித்து திகைத்துபோய்விட்டார். இவ்வள விற்கும் அவர் மாணவர்களுக்கு புனித புகாரி கிரந்தத்தை நடத்தக் கூடிய ஆசிரியராகவும் அவர் திகழ்கிறார்.

நேராக அந்த கடைக்காரனிடம் சென்று என்னப்பா இது? ஆச்சர்யமாக இருக்கு நானும் பல வருடங்களாக புகாரியை மாணவர்களுக்கு நடத்திக்கொண்டுதான் இருக்கிறேன். ஆனால் இப்படி ஒரு ஹதீஃதை நான் பார்த்ததே இல்லையே! யாரப்பா இந்த புகாரி ? என்று கேட்டபோது, அவன் சர்வ சாதாரணமாக நான் தான். என் பெயர்தான் புகாரி என்று கூறினான்.

இப்படித்தான் இன்று பல புகாரிகளும் கத்திரிக்காய் வியாபாரிகளும் ஹதீதுகளை சொல்லிக் கொண்டிருக் கின்றனர்.

நான் முன்பு சொல்லி வந்த பிஷ்ருல் ஹாஃபி நாயகத்தின் செய்திக்கு வருகிறேன்......

பல வருடங்களாக அவர்களின் மனது கத்தரிக்காய் சாப்பிடவேண்டும் என்ற விருப்பத்தை தெரிவித்தபோதும் அதற்கு சற்றும் இடம் கொடுக்காமல் அவர்கள் அதனை அவர்கள் எதிர்த்து போராடிவந்தார்கள். இதனை அறிந்த அவர்களின் நண்பர் அபுன்னஸ்ருத்தம்மார் (இவர்களும் ஒரு சூஃபி தான்), பிஷ்ருல் ஹாஃபி! ان الباذنجان من الحلال கத்தரிக்காய் சாப்பிடுவது ஹலாலான விஷயம் தானே! ஏன் அதனை தாங்கள் சாப்பிடக்கூடாது? என்று கேட்டபோது.... அபுன்னஸ்ர்! ஆமாம்! அது ஹலால் தான். ஆனால் அதன்மீது எனக்கு விருப்பம் வந்துவிட்டது. எப்போது என் கல்பை விட்டும் இந்த ஆசை போகிறதோ அப்போது நான் அதனை சாப்பிடுவேன். இறை விருப்பமும் கத்தரிக்காய் விருப்பமும் என் கல்பில் ஒன்று சேரக்கூடாது என்று கூறினார்கள். இறைவனின் விருப்பத்தோடு பிற விருப்பம் ஒன்று சேரக்கூடாது என்பதில் அந்த பெருமக்கள் எவ்வளவு கவனமாக இருந்துள்ளார்கள். தன் நேசன் அல்லாஹ்விற்காக எந்த விருப்பத்தையும் தியாகம் செய்திடும் பக்தர்களாகவே இருந்துள்ளார்கள்.

சுவனத்தை அடைவதற்கும் நரகத்தை விட்டும் பாதுகாப்பு பெறுவதற்கும் ஹலால் ஹராமை பேணவேண்டும். அல்லாஹ்வினதும் அவனது ரசூலினதும் ஏவல் விலக்கல்களை எடுத்து நடக்க வேண்டும். ஆனால் வல்ல அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கு ஆகுமாக்கப்பட்டதைக் கூட தியாகம் செய்யவேண்டும்.

ஒன்றை பெறுவதற்கு இன்னொன்றை இழக்க வேண்டும் என்று கூறுவர். இங்கே அல்லாஹ்வின் நெருக்கத்தைப்பெற ஒன்றை அல்ல பலதை (நிறைய) இழக்கவேண்டும்.

ஒரு மகான்..... அவர்கள் கூறுகிறார்கள்... எனக்கு ரொட்டியும் முட்டையும் சாப்பிடவேண்டும் என்ற ஆசை நெடுநாளாக இருந்து வந்தது. நானும் என் நஃப்ஸை வேதனைபடுத்தும் முகமாக அதனை கொடுக்காமல் நாட்களை கடத்தி வந்தேன். ஒரு கட்டத்தில் சரி அது கேட்பதைக் கொடுத்து அதனை அமைதி கொள்ளச் செய்வோம் என்று கருதினேன்.அது நான் ஒரு பிரயாணத்தில் இருந்த சமயம். வழியில் ஒரு சத்திரத்தில் தங்கும்நிலை ஏற்பட்டது.

(அந்த காலத்தில் அரசர்கள், கலீஃபாக்கள் பிரயாணம் செல்லும் மக்கள் தங்கி செல்வதற்காக இத்தகைய சத்திரங் களை அமைத்து வைத்திருந்தார்கள். அதில் உணவகமும் இருக்கும். பணம் கொடுத்து உணவுகளைப் பெறுவதும் இருக் கிறது. இலவசமாகவும் சில சத்திரங்களில் கொடுப்பார்கள்.

அப்படி அங்கு தங்கி இருந்தபோது , அவ்விடுதியில் இருந்த ஒருவரின் ஒருபொருள் திருட்டுபோய்விட்டது.பரபரப்பு ஏற்பட்டு அங்கும் இங்குமாக தேடிக்கொண்டிருக்கும்போது அங்கிருந்த ஒருவர் இவர்தான் அதை திருடினார் என்று இந்த சூஃபியைச் சுட்டிக் காட்ட அங்கிருந்த அதிகாரி, அவர்களுக்கு எழுபது கசையடி வழங்குமாறு கட்டளையிட்டார். அப்படி அடித்துமுடிக்கும் சமயம் இந்த சூஃபியைத் தெரிந்த ஒருவர் அங்குவர, இந்த காட்சியைக் கண்டு துடித்துப் போய்விட்டார். என்ன அநியாயம் நடக்கிறது? இவர்கள் யார் என்று தெரியுமா? இவர்கள்தான் இந்த மகான் என்று

கூற, அதிகாரி உட்பட அங்கிருந்த அனைவரும் பதறிப் போய்விட்டார்கள். அவர்களை திருடன் என்று சொன்ன வனைப்பார்த்து, நீ தானடா சொன்னாய் இவர்களைத் திருடன் என்று, என கோபமாக கேட்க, அவனும் இவர்கள்தான் திருடியதுபோன்று தெரிந்தது. அறியாமல் சொல்லிவிட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள் அவனும், அவனுடன் சேர்ந்து மற்றவர்களும் மன்னிப்பு வேண்டினர்.

உடனே அவ்வதிகாரி நம் நாயகருக்காக உணவு வாங்கி வருமாறு ஏவ, பணியாளனும் உணவு வாங்கிவந்தான்.அந்த உணவு ரொட்டியும் முட்டையும்......

இதனைக்கண்ட நமது சூஃபி அவர்கள்... யா ரப்பீ! நான் முட்டையும் ரொட்டியும் சாப்பிடவேண்டும் என்று ஆசைப் பட்டது உன்மைதான். அதற்காக எழுபது கசையடிகளைத் தந்துவிட்டா இதனைத்தரவேண்டும் என்று கேட்டார்கள்.

அருமையானவர்களே! இது போன்ற நிகழ்வுகள் நாம் சிந்தித்து உணர்வதற்குரிய இடங்கள். மகான்களை வல்ல அல்லாஹ் எப்படியெல்லாம் சோதித்திருக்கிறான். அவர்களும் அதனை எப்படி பொருந்திப்போய் இருக்கிறார்கள் என்பதை நாம் அறிந்துக்கொள்ளக் கூடிய இடங்கள் அவைகள்.

செய்யிதுனா ஸுஃப்யானுத் தௌரி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்... உலகம் அறிந்த மகான்....

அவர்களின் இயற்பெயர் ஸுஃப்யான் மட்டுமே! ஒருசமயம் அவர்கள் மஸ்ஜிதுக்குள் நுழையும் போது இடது காலை முன்வைத்து நுழைந்துவிட்டார்கள்.

பள்ளிக்குள் நுழையும் போது வலதுகாலை முன் வைத்து நுழைய வேண்டும் என்பதும் வெளிவரும்போது இடதுகாலை முற்படுத்தி வரவேண்டும் என்பதும் கண்மணி நபிகள் பூமான் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கற்றுத்தந்த ஒழுக்கமுறை.

ஒருமனிதன் அவன் செய்ய வேண்டிய எல்லா வழிமுறை களையும் அவன் நடப்பது எப்படி? சாப்பிடுவது எப்படி? தூங்கும்முறை எவ்வாறு? உடுத்தும்முறை எங்ஙனம்? மலஜல உபாதைகளை எப்படி சுத்தம் செய்வது? தன் மனைவி இடத்தில் உறவு கொள்வது எப்படி? என்பது உட்பட நம் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த சமூகத்திற்கு அனைத்தையும் கற்றுத்தந்திருக்கிறார்கள். இதனை ஆரிஃபீன்கள் என்ற இறையறிந்த பெருமக்களும் சூஃபிகள் என்ற உலக பற்றற்ற நாதாக்களும் சற்றும் பிசகாமல் அப்படியே செயல் படுத்துவர். சிலபொழுது அவர்கள் இதனை மறந்திடும்போது அல்லாஹ் அவர்களிடத்தில் எப்படி நடந்துகொள்கிறான் என்பதனை இதுபோன்ற நிகழ்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

அந்த வகையில் ஹழ்ரத் ஸுஃப்யானுத்ஃதௌரி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஒருமுறை பள்ளிக்குள் வலதுகாலை முன்வைத்து செல்ல மறந்து இடது காலை முற்படுத்தியபோது.....

யா தௌர்! காளை மாடே! என்று இறைவன் புறத்திலிருந்து ஓர் அசரீரி வந்து திடுக்கிட்டார்கள்.சட்டென வெளியே வந்து இறைவனிடத்தில் மன்னிப்பு வேண்டினார்கள். காளைமாடுதான் இடதுகாலை முன்வைத்து செல்லும்.

இன்று பாதைகளில் செல்லும்போது இடது வழியாக செல்வது MARCH FAST பண்ணும்போது left right இடது வலது என்று இடதை முற்படுத்துவது என்பது போன்ற செய்கைகளை ஏற்படுத்தி தந்தது பிரிட்டீஷ்காரர்கள்தான். அவர்கள் எங்கெல்லாம் ஆட்சி செய்தார்களோ அங்கெல்லாம் வழமைக்கு மாற்றமான காரியங்களையே செயலாக்கி வைத்தனர். இவர்கள் ஆட்சி செய்யாத எல்ல இடங்களிலும் மனிதர்கள் செல்வது வாகனங்கள் செல்வது எல்லாம் வலப்பக்கமாகவே இருக்கும். பிரிட்டிஷார் இந்த நாட்டை ஆண்ட சமயம், நம் நாட்டின் வளங்களை எல்லாம் சுரண்டினர். அத்தோடு நடைமுறைக்கு மாற்றமான ஒழுக்கக் கேடான விஷயங்களையும் கற்றுக்கொடுத்தனர். இடது கையால் சாப்பிட குடிக்க பயிற்றுவித்தனர். அதை ஒரு நாகரீகமாக ஆக்கினர்.

அத்தோடு இன்னொன்றையும் அவர்கள் கற்றுத்தந்தனர். குழந்தைகளுக்கு அழகான பாடல்கள் RHYMES என்று சற்றும் பொருத்தமில்லா பாடல்களை பள்ளிக்கூட பாடங்களாக ஆக்கினர் .உதாரணமாக... RAIN RAIN GO AWAY COME AGAIN ANOTHER DAY மழையே! மழையே! நீ போய்விடு! இன்னொருநாளைக்கு வா!

இந்த பாடலை மழை அதிகமாக பெய்யும் இடங்களில் பாடினாலாவது பொருத்தம் எனலாம். மழை குறைவாக பெய்யுமிடத்திலும் மழை அறவே பெய்யாத இடத்திலும் இதனைக் கற்றுக்கொடுத்தனர். இதில் பெரிய வேடிக்கை என்ன வென்றால் அவன் நம் நாட்டைவிட்டு சென்று பல வருடங்கள் ஆனபிறகும் கூட அந்த பாடலை பாடிக்கொண்டிருக்கின்றார்கள். நம் தமிழகத்தின் வறட்சி

மாவட்டங்களில் ஒன்றாகிய ராமநாதபுரம் போன்ற மாவட்டத்திலும் இப்பாடல் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்கப்படுகிறது என்றால் அது கேவலம் இல்லையா? மழை இல்லாமல் மஸ்ஜிதுகளிலும் கோயில்களிலும் மழை வேண்டி பிரார்த்தனை நடந்து கொண்டிருக்கும்போது பள்ளிக்கூடங்களில் மட்டும் மழையை விரட்டப்படுகிறது. இதனை மாற்ற முடியாதா? இதையன்றி வேறு அழகான பாடல்கள் எதுவும் இல்லையா?

ஆனால் இஸ்லாமும் சரி பிற மதங்களும் சரி... வலதையே முற்படுத்தச் சொல்கிறது. இங்கே ஹழ்ரத் ஸுஃயான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் இடதுகாலை முன்வைத்த போது இறைவன் புறத்திலிருந்து அவர்கள் காளைமாடே என்றழைக்கப்பட்டு திருத்தும் செய்யப்பட்டார்கள். ஆக, இறை நெருக்கத்தைப் பெற்றவர்கள், அவர்கள் அறியாமல் அவர்களிலே சில தவறுகள்மறதியால் நிகழ்ந் தாலும் அதனைத் திருத்திகொடுக்கும் பொறுப்பை வல்ல அல்லாஹ் ஏற்றுக் கொண்டிருக்கிறான். இது வல்ல நாயன் அவர்கள்மீது கொண்டிருக்கும் அளப்பெரிய அன்பின் வெளிப்பாடாகும். அந்த நாதாக்கள் இந்த நிலையை அடைவ தற்கு முழுமையாக இறைவனுக்கு வழிபட்டு வாழ்ந்து மனதின் நோய்களை முற்றிலுமாக களைந்து வாழ்ந்தார்கள்.

வல்ல அல்லாஹ் தன் நேசர்கள் சின்ன தவறிழைக்கும் போதும் அவர்களை எப்படியெல்லாம் காப்பாற்றுகிறான் என்பதற்கு இன்னொரு சான்று....

மாண்புமிகு மகான்களில் ஒருவராகிய சிர்ரியுஸ் ஸிக்தி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் ஒரு நண்பர் .....

நாயகமே! கடைத்தெருவில் நெருப்பு ஏற்பட்டு எல்லா கடைகளும் எரிந்து போய்விட்டது. உங்கள் கடை மட்டும் எரியவில்லை. தப்பிவிட்டது. உங்கள் கடைக்கு முன்னால் உள்ளது பின்னால் இருந்தது என எல்லா கடைகளும் சாம்பல். ஒரு கடை கூட எஞ்சவில்லை என்று சொன்னதும், அவர்கள் அல்ஹம்துலில்லாஹ் என்று கூறினர். அவ்வளவுதான். இறைவன் புறத்திலிருந்து அவர்களுக்கு ஒரு அருள் எச்சரிக்கை வந்தது.

சிர்ரியுஸ் ஸிக்தி...! உம் கடை எரியவில்லை என்று திருப்தி கொண்டு அல்ஹம்துலில்லாஹ் என்று சொல்கிறீரே! உம சகோதரர்களின் கடைகள் எரிந்து நாசமாகிவிட்டதே! அதைக் குறித்து உமக்கு கவலை இல்லையா? இந்த செய்தியைக் கேட்டு சந்தோஷம் கொண்டு அல்ஹம்து லில்லாஹ் என்று சொல்லாமல் பிறரின் கடைகள் எரிந்து போய்விட்டனவே என்று இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன் என்றல்லவா சொல்லி இருக்க வேண்டும்? என்பதாக அந்த அருள் எச்சரிக்கை இருந்தது. அன்றுமுதல் அப்படி அல்ஹம்துலில்லாஹ் என்று சொன்னதற்காக நாற்பது வருடங்கள் தவ்பா செய்தார்கள் என வரலாறு இயம்புகிறது. அல்ஹம்துலில்லாஹ் என்பது மகத்தான வார்த்தை. ஷுக்ருக்குரிய வார்த்தை என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. அதனை நாம் சொல்லியிருந்தால் அது ஒரு குற்றமாகவும் கருதப்பட்டி ருக்காது. இறைவனும் நம்மை கண்டித்திருக்க மாட்டான். ஆனால் அவனின் நெருக்கத்தைப் பெற்றவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று அவன் விரும்புகிறானோ அப்படி அவர்களை வடிவமைத்து வைக்கிறான்.

இதே நிலை நமக்கு ஏற்பட்டிருந்தால் அல்ஹம்துலில்லாஹ் என்று சொன்னதோடா நாம் நின்றிருப்போம்? தம்பட்டம் அடித்திருக்க மாட்டோமா? அவன் அப்படி செய்தான். அதனால் அவன் கடை எரிந்தது. இவன் இப்படி செய்தான். இதனால் பற்றி எரிந்தது. இப்போதாவது என்னைப்பற்றி தெரிந்துக் கொள்வார்களா? நான் யார் என்று? என தம்பட்டம் அடித்து பேசி இருப்போமே! ஆனால் அந்த பெருமக்கள் அடுத்தவர்களை குறைத்து பேசமாட்டார்கள் என்பது மாத்திரமல்ல. அடுத்தவர்களை தப்பாக எண்ணவும் தெரியாது அவர்களுக்கு.

செய்யிதுனா மஃரூஃபுனில் கர்கி (ரழியல்லாஹு அன்ஹு)..... பல தரீகாக்களின் ஸில்ஸிலாவில் இவர்கள் பெயர் பிரதானமாக இடம்பெறும். ஒருநாள் ஒரு குளத்தாங்கரையில் அவர்கள் தன் சீடர்களோடு அமர்ந்து அவர்களுக்கு ஞான உபதேசம் செய்துக்கொண்டிருந்தார்கள். அச்சமயம் அவ்வழியே ஓர் இளைஞர் பட்டாளம் குடித்து விட்டு கூத்தும் கும்மாளமுமாய் ஆடியும் பாடியும் சென்று கொண்டிருந்தார்கள். அந்த சப்தம் இவர்களின் உபதேசத்துக்கு இடையூறாக இருந்தது. இதனால் எரிச்சல் அடைந்த முரீதீன்கள், நாயகமே! இந்த இளைஞர்களைப் பார்த்தீர்களா? எவ்வளவு மோசமாக நடந்துகொள்கிறார்கள். இவர்களின் சொல்லும் செயலும் ஆபாசமாக இருக்கிறது. பெரியவர்களை மற்றவர்களை மதிக்காதவர்களாக இருக்கி றார்கள். இவர்கள் அடுத்தவர்களுக்கு எவ்வளவு இடைஞ் சலாக இருக்கிறார்கள். எனவே இவர்களுக்கு கேடாக துஆ செய்யுங்கள். இவர்கள் நாசமாகட்டும் என்று வேண்டியபோது.... அவர்களும் தன் இரு கரங்களை

தூக்கினார்கள். இதனைக் கண்ட, தங்கள் குருவைப்பற்றி நன்கு விளங்கியிருந்த சீடர்கள்... அவ்வளவுதான் நம் ஷைகு கை உயர்த்திவிட்டார்கள். நிச்சயமாக இவர்கள் அழிவது உறுதி என்ற எண்ணத்துடன் குருவின் துஆவிற்கு ஆமீன் கூற அவர்களும் கரம் உயர்த்த, நம் நாயகர் மஃரூஃபுனில் கர்கி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் இப்படி பிரார்த்தனை செய்தார்கள்.......

யா அல்லாஹ்! இதோ இங்கே கும்மாளமிட்டு குதூகலமாக செல்லும் இந்த மக்கள் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறார்களோ இதுபோன்று மறு உலகிலும் அவர்களை சந்தோஷமாக்கி வைப்பாயாக!

இந்த பிரார்தனையைக் கேட்ட சீடர்கள் திடுக்கிட்டு போய்விட்டார்கள். நாம் என்ன கேட்க சொன்னோம்? அவர்கள் கேட்பது என்ன?

இதுதான் இறை நெருக்கம் பெற்றோரின் குணம். மறு உலகில் சந்தோஷமாக இருப்பவர்கள் யார்? நன் மக்கள் தானே! எனவே இம்மக்களை நல்லவர்களாக ஆக்கி அருள்வாயாக என்பதே அவர்களின் பிரார்த்தனையின் சாரமாக இருந்தது. அவர்களும் நன் மக்களாக ஸாலிஹுன்களாக மாறினர் என்று வரலாறு பேசுகிறது.

ஓர் இறைநேசருக்கு சுட்ட இறைச்சி சாப்பிடவேண்டும் என்று ஆசை இருந்தது. சாப்பிடும் விஷயமாகவே பேசுகிறாரே! இவர் எதையும் நாம் சாப்பிட அனுமதிக்க மாட்டாரோ? என்று என்ன வேண்டாம். தாராளமாக சாப்பிடலாம். இறையன்பும் நேசமும் ஒருவருக்கு அதிகமாகி அவர் அல்லாஹ்வின் நெருக்கத்தைப்

பெற்று விடுவாரானால் அவரின் இதயத்தில் இதுபோன்ற போராட்டம் உருவாகி விடும். உலக விஷயங்களில் ஆசை குறைந்து போய்விடும் அல்லது இல்லாமல் ஆகிவிடும். நாம் அந்த நிலைக்கு வரும்வரை அல்லாஹ் அனுமதித்த எதையும் அனுபவிப்பதில் ஷரீஅத் எந்த ஆட்சேபனையும் செய்யாது. நான் விஷயத்திற்கு வருகிறேன்.......

அந்த மகானுக்கு சுட்ட இறைச்சி சாப்பிட நீண்டநாள் ஆசை.. நீண்டநாள் என்றால் ஏறக்குறைய பத்து வருடங்கள். கடும் போராட்டம். ஒரு கட்டத்தில் அல்லாஹ்வின் சமூகத்திலிருந்து........ ஏன் நப்ஃஸை இப்படி போட்டு வாட்டுகிறீர்கள். அதனை எதற்கு இப்படி பிழிந்து எடுக்கிறீர்கள். அது என்ன கேட்டுவிட்டது. ஆகுமான ஒன்றை தானே கேட்டிருக்கிறது. கொடுங்களேன். அதனை இம்சை படுத்தியதுபோதும் என்று அசரீரி முழங்கியது.

இங்கே இந்த அசரீரியைப்பற்றி சொல்லியாக வேண்டும். அசரீரி இரண்டு வகை இருக்கிறது. ஒன்று இறைவனின் தர்பாரிலிருந்து வருவது. மற்றொன்று ஷைத்தானின் புறத்திலிருந்து வருவது. இரண்டிற்கும் இடையில் வித்தியாசத்தைக் கண்டுபிடிப்பது என்பது அவ்வளவு லேசான ஒருகாரியமில்லை. நம்மைபோன்ற ஒரு சாதாரண மனிதனால் இதனை பகுத்தறிவது என்பது மிக்க கடினமானது. சில சமயம் ஒரு பொருளில் ORIGINALலைவிட DUPLICATE மிக அழகாக இருக்கும். அதனை தேர்ந்தவர்கள் கண்டுக் கொள்வார்கள். மாணிக்க வியாபாரத்தில் ORIGINAL-யும் IMITATION-யும் தெரிந்து கொள்வது என்பது கடினமானதே! அதிலேயே பழக்கப்பட்ட

ஆற்றல் மிக்க வியாபாரிகள், எது ஜாதி என்பதனை பளிச் சென கண்டுக் கொள்வார்கள். அதுபோன்றுதான் இந்த அசரீரி விஷயத்தில் ஹக்கு எது பாத்தில் எது என்பதனை இறை நெருக்கம் பெற்றவர்கள் அறிந்துக் கொள்வார்கள்.

சுட்ட இறைச்சி செய்தியை நிறைவுசெய்யும் முன்பு நம் குருநாதர் கௌதுல் அஃளம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஒரு செய்தி யை இங்கே குறிப்பிடுவது அவசியம் என்று கருதுகிறேன்.

ஒருமுறை அவர்கள் கடும் நிஷ்டையில் இருக்கும்போது அதிக தாகம் ஏற்பட்டு மிகுந்த கஷ்டப்பட்டார்கள்.அச்சமயம் வானிலிருந்து ஒரு வெள்ளிப் பாத்திரத்தில் தண்ணீர் இறங்கியது. அத்தோடு ஓர் அசரீரியும் முழங்கியது. அப்துல் காதிரே! இதனை உமக்கு ஹலாலாக்கிவிட்டோம். அருந்துவீராக!

இது ஷைத்தானின் சப்தம் என்பதனை விளங்கிக் கொண்ட நம் நாயகர், அடேய்! மல்வூனே! தூரப்போய்விடு! என் பாட்டனார் கண்மணி நாயகத்திற்கே இது ஆகுமாக்கப் படாதபோது எனக்கு எப்படி ஆகுமானதாக ஆகும்? இது உன் வேலை தான். தொலைந்துபோய்விடு என கர்ஜித்தார்கள்.

(இங்கே ஒருவிஷயத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். ஆண்களுக்கு ஒரு வெள்ளி மோதிரம் போட்டுக் கொள்வதற்கு அனுமதியுண்டு. பெண்களைப் பொறுத்தவரை அவர்கள் வெள்ளி மட்டுமல்லாமல் தங்கத்திலும் அணிகலன்கள் அணிந்துக் கொள்ளலாம். காலில் தண்டை போடலாம். தலையில் கிரீடம் வைக்கலாம்.இதெல்லாம்

அவர்களுக்கு ஆகுமாக்கப்பட்டதே! அனால் ஆண்களும் சரி.. பெண்களும் சரி... எக்காரணத்தைகொண்டும் தங்க வெள்ளி பாத்திரங்களை பயன்படுத்தி உணவு உண்ணவோ பானம் பருகவோ முடியாது. அது ஹராமாகும்.)

இதனைக் கேட்ட ஷைத்தான் நேரடியாக அவர்களின் முன்பாக வந்து அப்துல்காதிரே ! நான் தோற்றுப்போய் விட்டேன். உங்களை பலசமயம் பலவகையில் கவிழ்ப்பதற்கு முயற்சித்தும் என்னால் முடியாமல்போய்விட்டது.உங்களின் தவக்குல் (ஆழமான இறை நம்பிக்கை) தக்வா (அன்பு கலந்த இறையச்சம்) வின் காரணமாக என்னை வென்று விட்டீர்கள் என்றியம்பினான்.

இதனை கேட்கும் நமக்கு அவன் உண்மை சொல்வது போன்று தெரியும். அவன் சரியாக பேசியதாகவே நாம் நம்புவோம். அனால் நம் குருநாதர் அவர்கள், இப்லீஸே! இதுவும் என்னை கவிழ்க்க நீ செய்யும் இன்னொரு முயற்சிதான். நான் என் தக்வா வினால் தவக்குலினால் உன்னை வெல்லவில்லை. மாறாக என் ரப்பின் அருளால் உன்னை வென்றேன் என்றியம்பினார்கள். அவ்வளவுதான் ஓ...... என்று ஒப்பாரி வைத்த ஷைத்தான் தன் தலையில் மண்ணள்ளிப்போட்டு, அப்துல் காதிரே! இதற்குமுன் நான் எத்தனயோ பேரை இது போன்ற தந்திரங்களினால் வழிகெடுத்திருக்கிறேன். இனிமேல் உம்மிடம் நான் வரமாட்டேன். இனி எந்த சேட்டையும் உம்மிடம் செய்யமாட்டேன் என்று ஒரே ஓட்டமாக ஓடினான்.

இத்தகைய நல்லடியார்களைப் பற்றி குர்ஆனில் ....

வல்ல அல்லாஹ் ஷைத்தானை சபித்தபோது.....அவன் அல்லாஹ்வை நோக்கி....

قَالَ فَبِعِزَّتِكَ لَأُغْوِيَنَّهُمْ أَجْمَعِينَ – إِلَّا عِبَادَكَ مِنْهُمُ الْمُخْلَصِينَ

இறைவா! அந்தரங்கசுத்தியாக இருக்கும் உன் அடியார்களைத் தவிர்த்து ஏனையோர் அனைவரையும் உறுதியாக நான் வழிகெடுப்பேன் என்று கூறினான். கண்மணி நாயகம் صلى الله عليه وسلم அவர்கள் இத்தகைய இறைநெருக்கம் பெற்ற தூயவர்களைப் பற்றி குறிப்பிடும்போது.... إِنَّ لِلَّهِ عِبَادًا அல்லாஹ்விற்கென்றே சில நன்மக்கள் இருக்கிறார்கள் என்று இயம்புகிறார்கள். இவர்களை ரிஜாலுல்லாஹ் அல்லாஹ்வின் ஆட்கள் என்று அறிஞர்கள் சொல்வர்.ஆனால் பிறமக்களை ஷைத்தான் எப்படி வழி கெடுப்பான் என்பதனைப்பற்றி கூறும்போது

قَالَ فَبِمَا أَغْوَيْتَنِي لَأَقْعُدَنَّ لَهُمْ صِرَاطَكَ الْمُسْتَقِيمَ

நீ என்னை வழிகெட்டவனாக வெளியேற்றி விட்டதனால் (ஆதமுடைய மக்களை) உன்னுடைய நேரான வழியில் (செல்லாது தடுப்பதற்காக அவ்வழியில்) அவர்களுக்காகத் திட்டமாக நான் அமர்ந்துக் கொள்வேன் எனவும் இயம்பினான்.

ஆக அவன் சில நல்ல விஷயங்களைச் சொல்வது போன்று மக்களை கவிழ்த்துவிடுவான். ஆனால் நாதாக்களை ஒன்றும் செய்யமுடியாது என்பதனையும்

அவனே இங்கு ஒப்புகொள்கிறான் அவனால் அசைக்க முடியாமல் போன நன்மக்களில் நம் குருநாதர் கௌஃதுல் அஃளம் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் உயர் இடத்தில் இருக்கிறார்கள் என்பதற்கான வரலாற்று குறிப்பைத்தான் நாம் மேலே சொல்லிக்காட்டினோம்.

இது எதனைப் போன்றிருக்கிறது என்றால்.....

ஓர் அரசன் இருந்தான். அவனை யார் புகழ்ந்தாலும் அவனுக்கு பிடிக்காது. எல்லா அரசபைகளிலும் நடப்பது போன்று கவியரங்கு கருத்தரங்கு எல்லாம் இந்த அரசனின் சபையிலும் நடக்கும். ஆனால் அவனை மட்டும் யாரும் புகழ்ந்து பாடிவிடக் கூடாது. அதில் அவன் கவனமாக இருந்தான். அவனைப்போற்றி பாடுபவர்களுக்கு பரிசுக்கு பதிலாக கசையடி கொடுத்து விடுவான். ஒரு சமயம் ஒரு சாதுர்ய மிக்க கவிஞன், அரசவைக்கு வந்து, புகழுக்கு மயங்காத பேரரசே! என்று பாடினான். அவ்வளவுதான் மன்னனுக்கு சந்தோஷம் வந்து, சபாஷ் என்று வாழ்த்தி பரிசு வழங்கி மகிழ்வித்தான். அதில் அவன் மயங்கி போனான். ஆனால்....நம்குருநாதர் அவர்கள் இதுபோன்ற நிலைகளிலிருந்து முற்றிலுமாக நீங்கி இறையன்பிலும் நெருக்கத்திலும் வாழ்ந்ததால் ஷைத்தானின் எந்த ஊசாட்டமும் அவர்களைத் தீண்டமுடியாமல் போய்விட்டது.

இது போன்று இன்னொன்றையும் நான் இங்கே சொல்லியாகவேண்டும். சிலர் கனவுகளையே வாழ்க்கை யாக்கிக்கொள்வது உண்டு. அவர்களைக் கண்டேன் இவர்களைக் கண்டேன். அவங்க அப்படி சொன்னாங்க இவங்க இப்படி சொன்னாங்க என்றெல்லாம் சொல்லுவர்.

ஷரீஅத்திற்கு எந்த தொடர்பும் இல்லாதவைகளைக் கூறுவர். சமூகமக்கள் இத்தகைய மோசக்காரர்களின் வலையில் வீழ்ந்துவிடாமல் கவனமாக இருத்தல் வேண்டும்.

குறிப்பாக மன இச்சை என்ற நோய்களை நாம் அகற்றிட முயற்சிக்க வேண்டும். இறைவனின் செயல்களையும் அவனது சோதனைகளையும் பொருந்திக்கொள்ள வேண்டும்.

ஓர் இறைநேசரின் உடம்பில் ஒரு வியாதியை அல்லாஹ் ஏற்படுத்தினான். நாளாக நாளாக அந்த வியாதி அதிகமாகி அவர்களைப் பாடாய் படுத்தியது. அவர்களது காலில் கையில் வயிற்றில் காதில் கண்ணில் என்று இந்த வேதனை பெருகியபோது... அவர்கள் வல்ல நாயனிடம்... என் ரப்பே! இறைவனே! உன் விருப்பத்தில் குறுக்கிடுவதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை.என்னை மன்னித்துக்கொள் ரஹ்மானே! ஆனாலும் ஒன்றை உன்னிடத்தில் வேண்டுகிறேன்.என் உடம்பின் எந்த உறுப்பிலும் நீ நோவினையை தந்தாலும் பராவாயில்லை. ஆனால் என் நாவில் மட்டும் அவ்வேதனை ஏற்படாது பாது காப்பாயாக! ஏனெனில் அதனைக்கொண்டு தான் உன்னை நான் துதிக்க வேண்டும்...என்று வேண்டினார்கள். ஆனால் அதிலும் வேதனையைக் கொடுத்து அல்லாஹ் அவர்களை சோதித்தான். அப்போது அவர்கள் சொன்னது... என் இறைவா! இதுதான் உன் விருப்பம் என்றால் அதுவே என் விருப்பம் என்று கூறி பொருந்தியபோது.. வல்ல அல்லாஹ் அவர்களின் நோய்கள் அனைத்தையும் நீக்கி ஆரோக்கியம் நல்கினான்.

மொத்தத்தில் இறை நெருக்கத்தைப் பெற அவன் வழங்கும் சோதனைகளையும் பொருத்திருக்க வேண்டும்.

ஒரு மனிதனுக்கு நாலுநாள் தலை வலி ஏற்பட்டால் ... நான்கு நாட்களாக எனக்கு ஒரே தலைவலி. ஒரு வேலையும் செய்யமுடியவில்லை. தூக்கமும் இல்லை. டாக்டரிடமும் காட்டிவிட்டேன்.ஒன்னும் சரியாகவில்லை.என்றெல்லாம் அங்கலாய்க்கிறான்.அவனுக்கு நாற்பது வருஷமா சுகத்தை நல்ல ஆரோக்கியத்தை வல்ல அல்லாஹ் வழங்கி இருந்தானே! அதனை அவன் சொன்னானா? இதனை மட்டும் ஊர் முழுவதும் சொல்லிக் கொண்டிருக்கிறானே?

இதுபோன்று கோடி கோடியாக செல்வத்தை ரப்பு தஆலா அள்ளிக் கொடுத்திருப்பான். அவனது வியாபாரத்தில் மிகப்பெரிய லாபத்தை வழங்கி இருப்பான். அதன்மூலம் பல பிரேஞ்ச்களைத் திறந்திருப்பான். ஒவ்வொரு வருடமும் ஸ்டாக் எடுக்கும்போது லட்சமாகவோ கோடியாகவோ நிகர லாபத்தைக் கண்டிருப்பான். கார் வாங்கி இருப்பான். தோட்டம் துறவு வாங்கி இருப்பான் .புதிய புதிய றிலிளிஜி களை வாங்கியிருப்பான். அதே சமயம் ஏதோ ஒருவருடத்தில் சின்ன நஷ்டம்.... நஷ்டம் கூட இல்லை.லாபத்தின் விகிதாச்சாரம் குறைந்திருக்கும். அவனிடத்தில் BUSINESS எப்படி இருக்குது என்று கேட்டால் போதும் அவ்வளவுதான். என்ன BUSINESS. ரொம்ப டல்லா இருக்கு.....உழைப்பிற்கு தகுந்த ஊதியம் கிடைக்கவில்லை என்றெல்லாம் வசனம் பேசுவான். ஒருமனிதனுக்கு நோய் வரும்போது, நஷ்டம் வரும்போது ஏதேனும் இழப்பு வரும்போது கஷ்டம் வரும்போது,,, நான் யாருக்கு என்ன

தீங்கு செய்தேன். எல்லோருக்கும் உதவியாகத்தானே இருந்தேன்.அல்லாஹ் என்னை இப்படி சோதிக்கிறானே? என்றெல்லாம் கூறுவது நன்றி குறைந்த தன்மை. இதுவும் இதய நோய்களில் ஒன்றுதான்.

மாறாக நாதாக்கள் இதுபோன்ற விஷயத்தில் அல்லாஹ்வின் சோதனையைப் பற்றி பேசாமல் அவன் வழங்கி இருக்கும் நிஃமத்களைப் பற்றியே பேசுவர்.

وَقَلِيلٌ مِّنْ عِبَادِيَ الشَّكُورُ

என் அடியார்களில் (எனக்கு) நன்றி செலுத்துபவர்கள் மிக குறைவானவர்களே! என அல்லாஹ் அவனது வான்மறையில் இயம்புகிறான்.

எனவே இறைவனின் சோதனைகளைக் குறை கூறிக்கொண்டிருக்காமல் அவன் வழங்கிய நிஃமத்களை நன்றியுடன் நினைவுகூற வேண்டும்.

ஒரு மனிதர் கஃபாவின் அருகில் இப்படி ஒரு பிரார்த்தனையை செய்துக் கொண்டிருந்தார்.

اللهم اجعلني من القليل இறைவா! என்னை கொஞ் சமானவர்களில் ஆக்குவாயாக. இந்த பிரார்த்தனையை செவிமடுத்த ஒருவர்....ஆச்சரியப்பட்டு... அம்மனிதரிடம்.. இது என்ன துஆ? என்ன வேண்டுதல்? புதினமாக இருக்கிறதே? புதிராகவும் இருக்கிறதே? என்று வினவினார். சுவனத்தை கேட்க்கலாம்.அதன் சுகத்தை கேட்கலாம். ஹுருல் ஈன்களைக் கேட்கலாம். நரகத்தை விட்டும் பாதுகாப்பை கேட்கலாம். ஹவ்ழுல் கவ்ஃதரில் நீர் அருந்திட

கேட்கலாம். சுந்துஸ் ஆடையை அணிவித்திட, மஹ்ஷரின் பயங்கரத்தை விட்டும் தப்பிவிட, கப்ரின் அதாபை விட்டும் பாதுகாப்பு பெற்றிட, கேள்விகணக்குகள் லேசாகிட, துன்யாவின் கஷ்டங்கள் அகன்றிட குழந்தை பாக்கியம் பெற்றிட பூரண ஆரோக்கியம் பெற்றிட இப்படி கேட்பதற்கு எண்ணற்ற தேவைகள் இருக்கும்போது, கொஞ்சமானவர் களில் என்னை ஆக்கிவிடு அல்லாஹ்! என்று நீங்கள் கேட்டது விநோதமாக இருக்கிறது. அது என்ன துஆ? என்று கேட்க..... அல்லாஹ் நமக்கு செய்திருக்கும் நன்மைகள் அனந்தம். அனால் நாம் அவனுக்கு செய்திடும் ஷுக்ர் நன்றி எனபது வெகு சொற்பமாகவே இருக்கிறது. இதைக்குறித்து வல்ல அல்லாஹ் அவனது குர்ஆனில் وَقَلِيلٌ مِّنْ عِبَادِيَ الشَّكُورُ என் அடியார்களில் (எனக்கு) நன்றி செலுத்துபவர்கள் மிக குறைவானவர்களே! என்றியம்புகிறான். அந்த குறைவானவர்களில் என்னையும் ஆக்கிவிடு என்று பிரார்த்தித்தேன் என்றார். ஆக, நன்றி மறப்பதும் இறை நெருக்கத்தை விட்டும் தூரப்படுத்திவிடும்.

பொதுவாக நாம் பிறருக்கு உதவும்போது அவர் தனக்கு நன்றியுடன் நடந்துகொள்ள வேண்டும் என்றோ அல்லது தேங்க்ஸ் சொல்ல வேண்டும் என்றோ எதிர்பார்க்கக்கூடாது. நான் அவருக்கு இதை எல்லாம் செய்துகொடுத்தேன்.ஒரு தேங்க்ஸ்கூட சொல்லாமல் போய்விட்டார் என்றெல்லாம் சொல்லவும் கூடாது. எண்ணவும் கூடாது. அதேசமயம் உதவி பெற்றவர் நன்றி செலுத்த வேண்டும். ஆனால் வல்லவனாம் அல்லாஹ் அவனுக்கு அவனது அடியார்கள் நன்றி செலுத்துவதை அவன் எதிர்பார்கிறான்.

ஒரு இறை நேசர் கஃபாவை சுற்றிக்கொண்டிருக்கும் போது ஒருவரை அவதானிக்கிறார். பொதுவாக தவாஃபு என்பதின் ஷர்த்து..... அவர் ஒழுவுடன் இருக்க வேண்டும். அவ்ரத்தை மறைத்திருக்க வேண்டும்.கஃபாவை அவருக்கு இடது பக்கத்தில் ஆக்கி இருக்கனும். ஏழுமுறை சுற்றனும். ஹஜருல் அஸ்வதில் தவாஃபை துவக்கனும்.அதிலேயே முடிக்கனும். அப்படி சுற்றும்போது வாய்மூடி மௌனியாக சுற்றினாலும் சரியே! தவாஃபு கூடிவிடும். மாறாக ஏதேனும் ஓதிக்கொண்டு சுற்றினால் அதற்கு தகுந்தவாறு நன்மைகள் வழங்கப்படும். சிலர் குர்ஆனை ஓதுவர். சிலர் சலவாத்துக்களை ஓதுவர். சிலர் இஸ்திஃபார் செய்வர். சிலர் ஏழு சுற்றுகளிலும் ஏழு துஆக்களை ஓதுவர். ஓதினாலும் ஓதாவிட்டாலும் தவாஃபு கூடிவிடும்.ஆனால் இன்று தவாஃபில் ஓதுகிறார்களோ இல்லையோ மொபைலில் போன் பேசிக்கொண்டே சுற்றும் காட்சியைக் காணலாம். வீட்டில் எல்லோரும் சுகமா? கல்யாண வேலைகளெல்லாம் சிறப்பா நடக்கிறதா? பிள்ளைகள் எப்படி இருக்கிறாங்க? நான் மூனாவது சுற்று சுற்றுகிறேன். என்றெல்லாம் பேசிக்கொண்டும் தவாஃபு செய்துக்கொண்டுமிருக்கிறார்கள். அப்படி செய்வது கூடுமா கூடாதா என்றெல்லாம் நான் வாதம் பேச வரவில்லை.

நான் விட்டசெய்திக்கு வருகிறேன். ஒரு நேசர், ஒரு மனிதர் தவாஃபு செய்வதை காணும் நிலை ஏற்பட்டது. அவருக்கு பக்கத்தில் சுற்றிய அந்த மனிதர், ஏழு சுற்றிலும் நபிகள் பூமான் صلى الله عليه وسلم அவர்கள் மீதே சலவாத்களை சொல்லி முடித்தார். இது அந்த நேசருக்கு வித்தியாசமாக பட்டது. தவாஃபு சம்பந்தப்பட்ட அமல்கள்

நிறைவு பெற்றபின்பு, அம்மனிதரின் கையை பிடித்துகொண்டு நீங்கள் எதற்காக ஏழு சுற்றுகளிலும் சலவாத்தையே ஓதிவந்தீர்கள்? என்று கேட்டபோது... அம்மனிதர் இந்த நேசரைப்பார்த்து நீங்கள் யார் என்று கேட்க, அவர்கள் தன் பெயரை சொல்ல, விளங்கிக் கொண்ட அம்மனிதர் ஓ! நீங்களா? انت زاهد الزمان

இக்காலத்தின் சிரேஷ்டமானவர் ஆயிற்றே! கண்டிப்பாக உங்களிடம் சொல்லித்தான் ஆகனும் என்று கூறி சொல்லத் துவங்கினார்.

இவ்வருடம் நானும் என் தந்தையும் புனித ஹஜ்ஜை நிறைவேற்ற மக்கா வந்தோம். வந்த இடத்தில் என் தந்தை திடீரென்று மௌத்தாகிவிட்டார். புனித மண்ணில் புனித நாளில் சங்கையான மாதத்தில் கஃபாவின் அருகில் மரணித்து விட்டதும் அவர் சங்கையான ஜன்னத்துல் முஅல்லாவில் அடங்க பெற இருப்பதும் எனக்கு மிக்க சந்தோஷத்தை தந்திருக்க வேண்டும். ஆனால் அந்த சந்தோஷத்தை தொலைத்து மிகப்பெரும் சங்கடத்தை எனக்கு அவரின் மரணம் தந்தது. காரணம்.....

அவர் மரணித்தபோது அவரின்முகம் கறுத்து அசிங்க மாக மாறிவிட்டது. பார்ப்பதற்கு மிகவும் அறுவருப்பானதாக காட்சி தந்தது. இந்நிலையில் நான் எப்படி அடக்கம் செய்வது? தனி ஒரு நபரினால் குளிப்பாட்டி கஃபனிட்டு தொழவைத்து தூக்கி சென்று அடக்கம் செய்யமுடியுமா? யாரையேனும் உதவிக்கு அழைக்காமல் இத்தனை காரியங்களை தன்னந்தனியாக எப்படி ஆற்றமுடியும்? யாரையாவது அழைக்கலாம் என்றால் என் தந்தை இந்த

கோளத்தில் இருக்கும் போது நான் யாரை அழைக்க முடியும்? மிகுந்த மன உளைச்சலும் கடின வேதனையும் என்னை வாட்டி வதைக்க சங்கடத்தின் உச்சத்தில் அழுது புரண்டேன். என்ன செய்வது என்று திக்கு தெரியாமல் மயங்கி அப்படியே வீழ்ந்து விட்டேன். அந்த சமயத்திலும் எனக்கு ஒரு கனவு வந்தது. அதில் ஓர் அழகிய தோற்றத்தையுடைய அற்புதமான மனிதர் காட்சி தந்தார்கள். வெள்ளை வெளேரென உடையணிந்த அந்த அழகு மனிதர் என் தந்தை கிடத்தப்பட்ட இடத்திற்கு சென்று அவரின் முகத்தில் போடப்பட்ட துணியை அகற்றி தன் திருக்கரத்தினால் தடவிய பின்பு மீண்டும் துணியை முகத்தில் போட்டு மூடிவிட்டு சென்றார்கள். அப்போது கனவிலேயே நான் ஓடிச் சென்று அவர்களின் முந்தானையை பிடித்து கொண்டு.... தாங்கள் யார்? என் தந்தையின் நிலை ஏன் இப்படி ஆனது? தாங்கள் என்ன செய்தீர்கள்? என்று அடுக்ககடுக்காக கேட்டேன். அம்மாமனிதர் என்னை நோக்கி என்னை தெரியவில்லையா?

صاحب القران محمد رسول الله صلى الله عليه وسلم

நான்தான் அருள்மறை அல்குர்ஆன் வழங்கப்பட்ட முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்று இயம்பினார்கள். தொடர்ந்து... உன் தந்தை அவருக்கு வழங்கப்பட்ட செல்வத்தில் வீண் விரயம் செய்பவராக இருந்தார்.

إِنَّهُ لاَ يُحِبُّ الْمُسْرِفِين

நிச்சயமாக அல்லாஹ் வீண்விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை என்று வான்மறை கூறுகிறது. ஆனால்

உன் தந்தையோ அவருக்கு வழங்கப்பட்ட செல்வத்தில் வீண் விரயம் செய்பவராக இருந்தார். எனவே வல்ல அல்லாஹ் அவருக்கு இந்த தண்டனையைக் கொடுத்தான். அதேசமயம் அவரிடம் ஒரு நல்லமலும் இருந்தது. அது..... என்மீது அவர் சதா ஸலவாத்து சொல்லிக் கொண்டிருந்தார். அதன் பரிசாக அல்லாஹ் அவருக்கு வழங்கிய இந்த இழிவை என்மூலம் நீக்கிவிட்டான். என்றார்கள். இங்கே ஸலவாத்தின் மகிமை ஒரு பக்கம் பார்க்கப்பட்டாலும் மறுபக்கம் வீண் விரயம் என்பது இறைநெருக்கத்தை விட்டும் தூரப்படுத்தும் செயலாகும் என்பதனை விளங்க முடிகிறது.

அன்பிற்குரியவர்களே! மொத்தத்தில் இறை நெருக்கத் திற்கு அறியாமை ஹஸது என்னும் பொறாமை கோள் சொல்வது நன்றி மறந்த தன்மை தீய எண்ணம் என்பது போன்ற எல்லா கெடுதியான இதய நோய்களும் இறை நெருக்கதை விட்டும் நம்மை தூரப்படுத்திவிடும். எனவே அதனை நாம் விளங்கி புரிந்து அருள் நிறை நாயன் வல்ல அல்லாஹ்வை நெருங்கும் வழியை நம் முன்னோர்களான சூஃபிகள் ஆரிஃபூன்கள் எப்படி காட்டி தந்தார்களோ அவ்வழி சென்று கருணை நாயன் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவோமாக!

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளையும் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஷஃபாஅத்தையும் பெறுவோமாக! ஆமீன்!!!

* * *

94436 51381
94442 00584

SKY JEWELLERY

27, Nanayakara Street, Nagapattinam - 611 001. Ph: 04365 - 240800

Printed by: **Fahimiya Publishers | 98415 67213**